# பத்திரிக்கைச் செய்தி

## விருதுநகர் பொது மக்கள் 1000 ரூபாய் மதிப்புடைய 22 வகை அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அடங்கிய 10.425 கிலோ பை (அ) சிப்பத்தினை டோர் டெலிவரி மூலம் வாங்கி கொள்ளலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.இரா. கண்ணன், இ.ஆ.ப. அவர்கள் தகவல்

தமிழக அரசு கொரோனா வைரஸ் நோய் தொற்றைத் தடுக்க தீவிர தடுப்பு நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் எடுத்து வருகிறது. பொது மக்களின் நன்மை கருதி, குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 144 ன் படி 14.04.2020 வரையிலும் ஊரடங்கு உத்தரவு விதிக்கப்பட்டுள்ள நிலையில் பொது மக்கள் டோர் டெலிவரி மூலம் 22 அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அடங்கிய சிப்பத்தினை பெற்றுக் கொள்ளலாம்.

பூச்சிக் கொல்லி உபயோகப்படுத்தப்படாத மானாவாரி சாகுபடி விவசாய விளைபொருட்களான மஞ்சள், சீரகம், சோம்பு, கடுகு, வெந்தயம், மிளகு, துவரம்பருப்பு, உருட்டு உளுந்து, பாசிப்பருப்பு, பாசிப்பயறு, கருப்பு சுண்டல், புளி, பொரிகடலை, சீனி, போர்மொச்சை, கோதுமை மாவு, பெருங்காயத்தூள், வத்தல், ரவை, சமையல் எண்ணைய், உப்பு மற்றும் சக்ராகோல்டு டீ ஆகிய 22 உணவுப்பொருட்கள் அடங்கிய மொத்தம் 10.425 கிலோ எடையுள்ள சிப்பம் 1000 ரூபாய்க்கு டோர் டெலிவரி மூலம் விருதுநகர் முழுவதும் விற்பனை செய்யப்படுகிறது. எனவே விருதுநகர் பொதுமக்கள் அனைவரும் அரசின் ஊரடங்கு உத்தரவினை தவறாது தீவிரமாக கடைபிடித்து தங்களை தற்காத்துக் கொள்ள எங்கும் வெளியில் செல்லாமல் எளிதில் 1000 ரூபாய்க்கு அத்தியாவசிய உணவுப்பொருட்களை தொலைபேசி எண்கள் 9750943814, 9759943816, 9245412800 னை தொடர்பு கொண்டு வீட்டிலிருந்தபடியே பெற்று பயனடைய மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.இரா. கண்ணன், இ.ஆ.ப. அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

**கீழ்க்கண்ட உணவுப் பொருட்கள் அனைத்தும் சீட்ஸ் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் சிறுகுறு விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்பட்டது. இது பூச்சிகொல்லிமருந்து உபயோகப்படுத்தாத, மானாவாரி சாகுபடி விவசாய பொருட்கள்.**

| வ. எண் | வழங்கப்பட உள்ள பொருட்கள் | அளவு |
|---|---|---|
| 1 | மஞ்சள் | 100g |
| 2 | சீரகம் | 100g |
| 3 | சோம்பு | 100g |
| 4 | கடுகு | 100g |
| 5 | வெந்தயம் | 100g |
| 6 | மிளகு | 50g |
| 7 | துவரம்பருப்பு | 1kg |
| 8 | உருட்டு உளுந்து | 1 kg |
| 9 | பாசிப்பருப்பு | 1kg |
| 10 | பாசிப்பயறு | 1/2kg |
| 11 | கருப்பு சுண்டல் | 1/2kg |
| 12 | புளி | 1/4kg |
| 13 | பொரிகடலை | 1/2kg |
| 14 | சீனி | 1kg |
| 15 | போர்மொச்சை | 1/2kg |
| 16 | கோதுமை மாவு | 1/2kg |
| 17 | பெருங்காயத்தூள் | 1 pocket |
| 18 | வத்தல் | 1/2kg |
| 19 | ரவை | 1/2kg |
| 20 | சமையல் எண்ணெய் | 1 lit |
| 21 | உப்பு | 1 kg |
| 22 | சக்ரா கோல்டு டீ | 100g |

இதன் மொத எடை 10.425 **KG**

**இதன் மொத்த மதிப்பு ரூ.1000/-**